**<u>செய்தி வெளியீடு எண்.84</u>** **<u>நாள்.5.2.2009</u>**

## பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்களின் தலைமையில் அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மற்றும் தனிவட்டாட்சியர் (ஆதிந) கூட்டம் இன்று (05.2.09) சென்னை சீமாட்டி வெலிங்டன் கல்லூரி வளாக கட்டிடத்தில் உள்ள கூட்டரங்கில் காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2008–09 ஆம் ஆண்டில் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க அனுமதிக்கப்பட்ட தொகையில் 31.1.2009 ஆம் நாள் வரை செலவிடப்பட்ட தொகை மற்றும் பயன்பெற்ற பயனாளிகள் எண்ணிக்கை தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குவதில் உள்ள காலதாமதத்தை தவிர்த்து இந்நிதியாண்டிற்குள் ஒதுக்கப்பட்ட தொகை அனைத்தையும் செலவு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனார். பின்னர் மயானப்பாதை அமைப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்வதிலும் சிறப்பு கவனம் எடுத்து இலக்கினை எய்திட வேண்டுமென அறிவுறுத்தினர். மேலும் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் பாதிக்காத அளவில் பள்ளி, கல்லூரிகள் ஆரம்பித்தவுடன் கல்வி உதவித்தொகை வழங்கிட உரிய நடவடிக்கை எடுத்திட அமைச்சரவர்கள் அதிகாரிகளுக்கு ஆணையிட்டார். பின்னர் நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 6 ம் வகுப்பில் மாணவர்களை சேர்க்கும் திட்டத்தின் கீழ் சேர்ந்துள்ள மாணவர்களின் முன்னேற்றத்தினை நான்கு மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்திட வேண்டுமென அமைச்சரவர்கள் அறிவுறித்தினார்கள். மேலும் வரும் ஆண்டுத் தேர்வில் 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்ச்சி விகிதம் அதிகரிக்கும் வண்ணம் சிறப்பு வகுப்புகள் நடத்திட வேண்டுமென அமைச்சரவர்கள் அறிவுறுத்தினார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு கண்ணகி பாக்கியநாதன்,இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை ஆணையர் திரு இரவீந்தரன்,இ.வ.ப., மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**********

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.